நகர்மன்றம்
உதகமண்டலம்
**06–03–2020.**

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற மார்ச் –2020–ம் மாத அவசரக்கூட்டம் வருகிற 06–03–2020 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** நீலகிரி மாவட்டம் உதகை வட்டம் உதகை நகரம் புல எண். A7/12/1 மற்றும் A7/12/2 கொண்ட காலையில் 15 ஏக்கர் நிலத்தினை அரசு மருத்துவக்கல்லூாி கட்ட நிலம் வழங்க கோரியதன் அடிப்படையில் மேற்படி அரசு விதைப்பண்னை மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தினை குடும்ப நலம் மற்றும் சுகாதார நலத்துறைக்கு நில மாற்றம் செய்வது தொடர்பாக இந்நகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் நீலகிரி மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண். யு4/16304/2018 நாள்,06/02/2020 மூலம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி புல எண் A7/12/1 மற்றும் A7/12/2 கொண்ட இடமானது நகர நில அளவை ஆவணங்களின் படி உதகை நகரம் சர்க்கார் புறம்போக்கு அரசு விதைப்பண்னை மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை என்ற பதிவினை கொண்டுள்ளது. இவ்விடத்தில் அரசு மருத்துவக்கல்லூாி கட்ட குடும்ப நலம் மற்றும் சுகாதாரத்துறைக்கு 15 ஏக்கர் நிலத்தினை நில மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனையின்மை சான்று வழங்க கோரிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
**ந.க.எண். 1173/2020/எப்2.**
**தீர்மானம் எண்: 1971 அனுமதிக்கப்பட்டது .**

**2.** நீலகிரி மாவட்டம் உதகை வட்டம் உதகை ஊரகம் புல எண். 228/1 கொண்ட காலையில் 25 ஏக்கர் நிலத்தினை அரசு மருத்துவக்கல்லூாி கட்ட நிலம் வழங்க கோரியதன் அடிப்படையில் மேற்படி நிலத்தினை குடும்ப நலம் மற்றும் சுகாதார நலத்துறைக்கு நில மாற்றம் செய்வது தொடர்பாக இந்நகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் நீலகிரி மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.யு4/16304/2018 நாள்,30/01/2020 மூலம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி புல எண் 228/1 கொண்ட இடமானது நகர நில அளவை ஆவணங்களின் படி உதகை கிராமம் ரூரல் குறுவட்ட பகுதியினை சார்ந்ததாகும். இவ்விடத்தில் அரசு மருத்துவக்கல்லூாி கட்ட குடும்ப நலம் மற்றும் சுகாதாரத்துறைக்கு 25 ஏக்கர் நிலத்தினை நில மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனையின்மை சான்று வழங்க கோரிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**

**ந.க.எண். 902/2020/எப்2.**

**தீர்மானம் எண்: 1972 அனுமதிக்கப்பட்டது .**

**3.** நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் நகராட்சியானது சுமார் **30.67** சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கோடை வாசஸ்தலமாகும். இதில் **2011** ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை **88,422** ஆகும். இந்நகராட்சியானது **1864**ஆம் ஆண்டு முதல் நகராட்சியாக செயல்படுத்தப்பட்டு, கடந்த **1987** ஆம் ஆண்டு முதல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இங்கு தாவரவியல் பூங்கா, படகு இல்லம், ரோஜா பூங்கா, கர்நாடகா பூங்கா, மற்றும் தொட்டபெட்டா போன்ற சுற்றுலா பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த சுற்றுலாத்தளங்கள் அமைந்துள்ளதால் ஆண்டுதோறும் இங்கு பல லட்சக்கணக்கிலான உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

கோடைக்காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் பல்வேறு பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகள் தங்களது சொந்த வாகனம் மற்றும் வாடகை வாகனங்களில் அதிக அளவில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர், மேற்படி வாகனங்கள் சாலைகளில் ஆங்காங்கே நிறுத்துவதால் வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுவதுடன் சுற்றுலா வரும் பயணிகளுக்கு மிகுந்த அசௌகரியத்தையும், கால விரயத்தையும் ஏற்படுத்துகிறது.

மேலும், சுற்றுலா வரும் பயணிகள் மலை மாவட்டங்களில் விளையும் பொருட்களை வாங்க மிகுந்த ஆர்வம் காட்டுவதால் தங்களது வாகனங்களை வாகன நிறுத்துமிடங்களில் நிறுத்த போதிய இட வசதியின்மையால் சாலை ஓரங்களிலேயே நிறுத்தி செல்கின்றனர். நகராட்சிக்கு சொந்தமான சந்தையானது நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் இச்சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது வாகனங்களை நிறுத்த இடமின்றி பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர்.

இதனை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு உதகமண்டலம் நகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள வருவாய்த்துறைக்கு சொந்தமான புல எண்.E/10/1 கொண்ட இடத்தில் இயங்கி வரும் மெட்ராஸ் ரேஸ் கிளப் அவர்களது அனுபோகத்தில் உள்ள இடத்தில் சுமார் **1.50** ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டதில் மேற்படி மெட்ராஸ் ரேஸ் கிளப் அவர்களிடமிருந்து வருவாய் துறைக்கு நிலத்தினை ஒப்படைக்க கோரிய சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WA**1996/2019** ன் நாள்.**28/08/2019** ம் தேதிய தீர்ப்பில் கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது

> As per the earlier order passed by this court on 25.07.2019, the madras Race club handed over 1.5 acres to the District Administration which fact is also acknowledged by Mr. N.Vijay Narayan, learned Advocate General Further, the club has also filed a report dated 26.08.2019 starting that they had handed over the said 1.5 acres of land to the District Administration to enable them to develop the said land as a parking lot. as far as the alternate site to be provided to madras Race club to shift the existing Race club from ooty is concerned two places two places were shown to the madras Race club officials and a joint inspection was made on 24.08.2019.

எனவே மேற்படி இடத்தில் பல்நோக்கு வாகனநிறுத்துமிடம் அமைக்கும் பட்சத்தில் சுற்றுலா பயணிகளுக்கு எவ்வித இடையூறும் இன்றி வாகனங்களை நிறுத்த வாகன நிறுத்துமிடம் அமையும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் சிரமங்களை தவிர்க்க இயலும். மேலும், இப்பகுதியானது மூன்று

புறங்களிலும் அணுகு சாலையை கொண்டுள்ளதால் வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்கள் உள்ளே சென்று வர எவ்வித இடையூறும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும், தற்பொழுது உதகமண்டலம் நகர பகுதிகளில் வாகனங்களை நிறுத்த அரசு மற்றும் தனியார் வாகன நிறுத்துமிடங்கள் போதுமானதாக இல்லாத நிலையில் இந்த வாகன நிறுத்துமிடத்தினை செயல்படுத்தப்படும் பட்சத்தில் சுற்றுலா பயணிகளுக்கு பெருமளவு உபயோகமாக இருக்கும்.

எனவே, ரேஸ் கோர்ஸ் பகுதியிலுள்ள வருவாய்த்துறைக்கு சொந்தமான புல எண்..E/10/1 கொண்ட இடத்தில் குதிரை பந்தயத்திற்கு எவ்வித பாதகமும் ஏற்படாத வகையில் சுமார் 1.50 ஏக்கர் பரப்பளவில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கவும், அதில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திடவும் உதகமண்டலம் முழுமைத்திட்டத்தில் புல எண்..E/10/1 கொண்ட இப்பகுதியினை வாகன நிறுத்துமிடம் என்ற நில உபயோக வகைப்பாட்டுக்கு மாற்றம் செய்திட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் வழியாக அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள உள்ளூர் திட்டக்குழும அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** வருவாய்த்துறைக்கு சொந்தமான புல எண்..E/10/1 கொண்ட இடத்தில் சுமார் **1.50** ஏக்கர் பரப்பளவில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கவும், அதில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திடவும் உதகமண்டலம் முழுமைத்திட்டத்தில் புல எண்..E/10/1 கொண்ட இப்பகுதியினை வாகன நிறுத்துமிடம் என்ற நில உபயோக வகைப்பாட்டுக்கு மாற்றம் செய்திட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் வழியாக அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள உள்ளூர் திட்டக்குழுமம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2488/2020/இ5)**

**தீர்மானம் எண்: 1973 அனுமதிக்கப்பட்டது .**

**4.** உதகமண்டலம் நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்கும் பணியினை மேற்கொள்ள வெளிக் கொணர்வு ஒப்பந்ததாரர் மூலம் 28 நபர்களை கொண்டு பணியாற்றிய காலம் 13.3.2020 முடிவடைகின்றது.

மேலும், இப்பணியினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 9.7.2019 ஆம் தேதிய கூட்ட அறிவுரையினை பின்பற்றி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 28 நபர்களை மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் மூலம் பணிபுரிய ஆகும் செலவினம் ரூ.17,56,860/—க்கும், மேலும் நிர்வாக நலன் கருதி பொது சுகாதாரப் பிரிவில் மேற்காணும் பணியினை மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

1. **மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை பொது நிதி மற்றும் Slum –user Charges லிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.2681/2020/எச்1)**

**தீர்மானம் எண்: 1974 அனுமதிக்கப்பட்டது .**

நகர்மன்றம்
உதகமண்டலம்
17–03–2020.

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற மார்ச் –2020–ம் மாத அவசரக்கூட்டம் வருகிற 17–03–2020 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** உதகமண்டலம் நகராட்சி 30.67 ச.கி.மீ. பரப்பளவில் உள்ளது. நகரின் மக்கள் தொகை (2011)ன் படி 88422 ஆகும். இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகள் தீட்டுக்கல் உரக்கிடங்கில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி தீட்டுக்கல் உரக்கிடங்கிற்கு கடந்த 08.08.2019 மற்றும் 01.02.2020 ஆகிய நாட்களில் தேசிய பசுமை தீர்ப்பாய ஆணைய தலைவர், நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் மற்றும் இதர துறை உயர் அதிகாரிகளால் நேராய்வு செய்யப்பட்டதில் உரகிடங்கில் கொட்டப்பட்டுள்ள குப்பைகள் விவசாய நிலம் மற்றும் வனத்துறைக்கு சொந்தமான நிலத்திற்குள் செல்வதை தடுக்கும் பொருட்டு சுற்று சுவர் அமைக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ.127.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தொகை ரூ.127.00 இலட்சத்திற்கு அரசு நிதி 2019–2020ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை கீழ்கண்ட பட்டியலின் படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | நீளம் (மீ) | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தீட்டுக்கல் உரக்கிடங்கு பகுதியில் விவசாய நிலத்திலிருந்து வடக்கு பகுதியில் வனநிலப் எல்லை பகுதி 0 முதல் 400 மீ வரை சுற்று சுவர் அமைக்கும் பணி. | 400.00 மீட்டர் | 59.00 |
| 2 | தீட்டுக்கல் உரக்கிடங்கு பகுதியில் பார்சன்ஸ் வேலி பிரதான சாலை முதல் வனநிலப் எல்லை பகுதி வரை 400 முதல் 855 மீ வரை சுற்று சுவர் அமைக்கும் பணி | 455.00 மீட்டர் | 68.00 |
| | | | 127.00 |

அதன்படி மேற்கண்டவாறு ரூ.127.00 இலட்சம் நிதியினை மானியமாகவோ அல்லது நகராட்சி பங்களிப்புடன் கூடிய மானியமாகவோ 2019–20ம் ஆண்டில் அரசு நிதி இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

**மேற்கண்ட நிதியினை மானியமாகவோ அல்லது நகராட்சி பங்களிப்புடன் கூடிய மானியமாவோ 2019—20ம் ஆண்டில் அரசு நிதியில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/1335/2020)**

**தீர்மானம் எண்: 1975 அனுமதிக்கப்பட்டது .**

**2.** உதகமண்டலம் நகராட்சி கோடப்பமந்து சேனலில் பழுதடைநதுள்ள UGSS குழாய்களை மாற்றியமைக்க மூலதன வளர்ச்சி நிதி 2019—20 நிதியின் கீழ் ரூபாய் 500.00 லட்சத்திற்கு எடுக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 10.10.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிற்கு ஏந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெறவில்லை,

இரண்டாவது முறையாக 15.11.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியிருந்த திருவாளர்கள் முரளி அண்ட் கோ அவர்கள், மதிப்பீட்டை விட 11.31% கூடுதலாக வழங்கியதுடன், விலைகுறைப்பு செய்து வழங்க இயலாது எனவும் தெரிவித்துவிட்டார்.

தற்போது மூன்றாவது முறையாக 03.03.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிர்ப்பிறகு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஆர்.முருகன் அவர்கள் மதிப்பீட்டை விட 9.94% கூடுதலாக வழங்கி, விலைகுறைப்பு செய்து வழங்க இயலாது என தெரிவித்துவிட்டார்.

எனவே மீண்டும் நான்காவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரினால் காலதாமதம் ஆகும் என்பதாலும், ஒப்பந்தப்புள்ளி கோர கூடுதலாக செலவு ஏற்படும் என்பதாலும், வரும் ஏப்ரல் மாதம் முதல் அடுத்த நிதியாண்டிற்கான (2020—21) புதிய தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் **(New Schedule of Rate for 2020-21 from PWD, and TWAD Board)** வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம். எனவே மீண்டும் புதிதாக மறு மதிப்பீடு தயாரிப்பதோடு, மதிப்பீட்டு தொகையும் மாறும் நிலை உள்ளதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க ஒப்பந்தம் வழங்குதல் கூராய்வு குழு சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து கடிதம் அனுப்பப்பட்டது.

கடந்த 13.03.2020 அன்று முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அறையில் நடைபெற்ற கூட்டத்தில், ஒப்பந்தம் அளித்தல் கூராய்வு குழு அவர்களால் மேற்படி திரு.ஆர்.முருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு கூட்ட நடவடிக்கை அனுமதி பெறப்பட்டுள்ளது.

வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு

| Sl. No | Name of the Bidder | Value Put ot Tender As per Technically Sanctioned Estimate (Excluding of GST) | Amount and percentage as Per the Bidding by the Bidder (Excluding of GST) | | |
|---|---|---|---|---|---|
| | | | Bid Price | Amount (Excess/ Less) | Tender % |
| 1. | Thiru.R.Murugan | Rs.4,34,98,861/- | Rs.4,78,22,265/- | Rs.43,23,404/- | மதிப்பீட்டு விலை விகித்தைவிட 9.94% அதிகம் (L1) |
| 2. | Thiru.R.Rangasamy | | Rs.4,87,34,071/- | Rs.52,35,210/- | மதிப்பீட்டு விலை விகித்தைவிட 12.04% அதிகம் (L2) |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை 9.94% கூடுதலாகவும் உள்ள திரு.ஆர்.முருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தம் அளித்தல் கூராய்வு குழு–ன் அடிப்படையில் ஏற்கலாம்.

மேலும் மேற்ப்படி ஒப்பந்த புள்ளி மதிப்பீட்டை விட 9.94% கூடுதலாக உள்ளதால், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. **தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
3. **ஒப்பந்தப்புள்ளி 9.94% கூடுதலாக உள்ளதால், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/4735/2019)**

**தீர்மானம் எண்: 1976 அனுமதிக்கப்பட்டது .**

நகர்மன்றம்
உதகமண்டலம்
**18–03–2020.**

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற மார்ச் –2020–ம் மாத அவசரக்கூட்டம் வருகிற 18–03–2020 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

1. நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை மேற்கு புல எண். A/3/12 கொண்ட காலையில் 25 ஏக்கர் நிலத்தினை அரசு மருத்துவக்கல்லூரி கட்ட நிலம் வழங்க கோரியதன் அடிப்படையில் நகர் அளவை ஆவணங்களில் ஒதுக்குகாடு என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தினை, குடும்ப நலம் மற்றும் சுகாதார நலத்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக இந்நகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் நீலகிரி மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.யு4/16304/2018 நாள்.06.03.2020 மூலம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி புல எண். A/3/12 கொண்ட இடமானது நகர நில அளவை ஆவணங்களின் படி உதகை மேற்கு சர்க்கார் புறம்போக்கு ஒதுக்குகாடு என்ற பதிவினை கொண்டுள்ளது. மேலும், உதகமண்டலம் நகராட்சி முழுமை திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி Reserve Forest RF1 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் அரசு மருத்துவக்கல்லூரி கட்ட குடும்ப நலம் மற்றும் சுகாதாரத்துறைக்கு 25 ஏக்கர் நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட நகரளவை எண்ணில் நகராட்சியின் உத்தேசங்கள் ஏதும் இல்லாததால் மேற்கண்ட இடத்தில் மருத்துவ கல்லூரி கட்ட தடையில்லா சான்று வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**தனி அலுவலர் பதிவு செய்யலாம். மேலும் மருத்துவ கல்லூரி கட்ட தடையில்லா சான்று வழங்கிட அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.2908/2020/எப்2)**

**தீர்மானம் எண்: 1977 அனுமதிக்கப்பட்டது .**

நகர்மன்றம்
உதகமண்டலம்
31–03-2020.

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் மார்ச் 2020–ம் மாத அவசரக் கூட்டம் வருகிற **31.03.2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து வரம் திரு.A.நந்தகோபால் அவர்கள் தன் மீது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து வகுப்பு IV பதவிக்கான முன்னுரிமை பட்டியலில் தனது பெயர் சேர்க்கப்படாததன் காரணமாக அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர்கள் மீது வழக்கு எண்.W.P.No.**32958/2019**ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் எதிர்வழக்காட திருமதி.எம்.ஜெயஸ்ரீ, அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்துள்ளார். எனவே மேற்படி வழக்கின் செலவினத்தொகை ரூ.**15,000**/–ஐ அன்னாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.12443/2019/சி1)**
**தீர்மானம் எண்: 1978 அனுமதிக்கப்பட்டது .**

**2.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **36** வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை தீட்டுக்கல் உரக்கிடங்கில் **1940**–ம் ஆண்டு முதல் கொட்டப்பட்டு வருகிறது. கடந்த **8.8.2019** அன்று பசுமை தீர்ப்பாய ஆணைய தலைவர், வனத்துறை முதன்மை செயாளர், நகராட்சி நிர்வாக ஆணையரக இணை இயக்குநர், நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இதர துறை உயர் அதிகாரிகளால் தீட்டுக்கல் உரக்கிடங்கு நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட ஆய்வின்போது பல ஆண்டுகளாக உரக்கிடங்கில் சேகரமாகி பரவியுள்ள பழைய குப்பைகளை ஒரு சேர குவித்து Biomining முறையில் அப்புறப்படுத்த அறிவுறுத்தியதன் பேரில் அக்ரி இஞ்சினியரிங் துறைக்கு சொந்தமான கனரக புல்டோசர் மற்றும் Hitachi, JCB மூலம் குப்பைகளை குவிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. **1.2.2020** அன்று நீதிபதி தேசிய பசுமை தீர்ப்பாய ஆணைய தலைவர், வனத்துறை முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனர், மாவட்ட ஆட்சித் தலைவர்

ஆகியோரால் மறு ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தீட்டுக்கல் உரக்கிடங்கு ஆய்வு செய்த பொழுது உரக்கிடங்கில் அலுவலக அறைக்கு கிழக்கு பகுதியில் உள்ள குப்பைகளை முழுவதும் அகற்றி எதிர்புறத்தில் குவிக்கப்பட்டுள்ள குப்பைகளுடன் சேர்த்து குவிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே, இப்பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி பொத நிதிகளில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை ஒப்பந்தபுள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர அனுமதிக்கலாம்.**
3. **தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டல தலைவர் அவர்கள் தீட்டுக்கல் உரக்கிடங்கினை விரைவில் பார்வையிடவுள்ளதால் இப்பணியினை விரைந்து மேற்கொள்ளலாம்.**
4. **முன் அனுமதி வழங்கப்படுகிறது.**

**(ந.க.எண். )**

**தீர்மானம் எண்: 1979 அனுமதிக்கப்பட்டது .**

**3.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட காந்தல் பகுதியில் உள்ள, புல் அறுக்கும் உரிமத்திற்கு 1.6.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமம் 31.5.2020 வுடன் முடிவு பெறவுள்ளது. எனவே, 1.6.2020 முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க, ஏல நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண்.2882/2020/அ7)**

**தீர்மானம் எண்: 1980 அனுமதிக்கப்பட்டது .**

**4.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பிங்கர் போஸ்ட் பகுதியில் வாகனம் நிறுத்துவதற்கான குத்தகை உரிமம் 1.6.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமம் 31.5.2020 முடிவடைகிறது. எனவே 1.6.2020 முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை வழங்க, ஏல நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண்.2874/2020/அ7)**

**தீர்மானம் எண்: 1981 அனுமதிக்கப்பட்டது .**

**5.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1025/2018/எல்3, நாள்.27–2–2020 தெரிவித்துள்ளவாறு 2018–19 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.6,49,446/– அரசு கணக்கில் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.6,49,446/– அரசு கணக்கில் செலுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.407/2016/பி4)**

**தீர்மானம் எண்: 1982 அனுமதிக்கப்பட்டது .**

**6.** உதகமண்டலம் நகராட்சி NULM SM & ID திட்டத்தின் கீழ் ஈரோடு (PAASAAM) சுய உதவி குழு ALF & CLF அமைக்க ரூ.5.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இதில் முதல் மற்றும் இரண்டாம் தவணைத் தொகையாக ரூ.1.50 இலட்சம் பாசம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.3.50 இலட்சம் பாசம் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய தொகை இந்நகராட்சியில் IHHL விண்ணப்பங்கள் ஆன் லைனில் பதிவு செய்தல் மற்றும் போட்டோ அப்லோடு செய்வது போன்றவற்றிற்கான பட்டியல்கள் வழங்கும் போது ஆன் லைனில் பதிவு செய்தமைக்கு நகராட்சி பொது நிதியில் வழங்குவதற்கு மாறாக பாசம் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய தொகையிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. எனவே பாசம் நிறுவனத்திற்கு தற்போது தொகை வழங்க வேண்டியுள்ளதால் இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.3.50 இலட்சம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.10799/2015/சி3)**

**தீர்மானம் எண்: 1983 அனுமதிக்கப்பட்டது .**

**7.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் 2019–2020 ம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள பணிகள் சம்பந்தமாக மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பர செய்ய வேண்டியுள்ளது. மேலும் அரசு சாதனைகள் சம்பந்தமாக சிறுவர் மலர்களில் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மேற்படி தொகை ரூ.10.00 இலட்சத்தினை வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ1/3542/2019)**

**தீர்மானம் எண்: 1984 அனுமதிக்கப்பட்டது .**

**8.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள மான்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படியும், 17.03.2020 அன்று தலைமை செயலாளர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் வழங்கிய அறிவுரையின் படியும் இந்நகராட்சியில் 36 வார்டுகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– வருவாய் மற்றும் மூலநியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சுகாதார பொருட்களை அரசு நிறுவனமாக தமிழ்நாடு மல்டிபர்ப்பஸ் இண்கோ சர்வ, திருச்சிராப்பள்ளி அவர்களிடம் இருந்து கொள்முதல் செய்ய தனி அலுவலரின் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு :–

1. **பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலநிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.3261/2020/எச்2)**

**தீர்மானம் எண்: 1985 அனுமதிக்கப்பட்டது**

**9.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னொச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள மான்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படியும் 17.03.2020 அன்று தலைமை செயலாளர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் வழங்கிய அறிவுரையின்படியும் இந்நகராட்சியில் 36 வார்டுகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/– தனியலுவலர் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு :–

1. **பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**
3. **பொது சுகாதார நலன் கருதி மேற்கொள்ளும் தீவிர அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு முன் அனுமதி வழங்கப்படுகிறது.**

**(ந.க.எண்.3261/2020/எச்2)**

**தீர்மானம் எண்: 1986 அனுமதிக்கப்பட்டது .**

**10.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27 காந்தல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டு உள்ள Bio Gas Plant–ல் மக்கும் குப்பைகளான மார்க்கெட் Waste, சிக்கன் Waste மற்றும் Food Waste ஆகிய Waste கள் அரைக்கப்பட்டு அதன் மூலம் மீத்தேன் Gas தயாரிக்கப்பட்டு அதனை அருகில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 2 எண்கள் 20 HP மோட்டார் இயக்கப்பட்டு வருகிறது. இந்த Bio gas Plant–ல் மக்கும் குப்பைகளை

அறைக்கும் இடத்திற்கு முன்புறம் திறந்த வெளியாக உள்ள இடத்தில் குப்பைகள் இறக்கப்பட்டு பின் அரைக்கப்படுகிறது. இவ்வாறு மக்கும் குப்பைகளை இறக்கும் இடத்தில் மழைக்காலங்களில் குப்பைகள் மழையினால் நனைந்து விடுவதால் மிகவும் துர்நாற்றம் வீசுவதுடன் இரக்கப்பட்ட அனைத்து குப்பைகளும் அரைக்க முடிவதில்லை. எனவே மக்கும் குப்பைகளை இறக்கும் இடத்தில் Roofing Sheet அமைக்க வேண்டியது அவசியம். மேலும் Bio gas Plant–ல் உள்ள Genset யை இயக்க தேவையான 1500mh Battery ஆனது பழுதடைந்து உள்ளதால் இதனை மாற்றி புதிய Battery ஒன்று வாங்க வேண்டி உள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.65/– இலட்சத்திற்கு வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்காக.**
**(ந.க.எண்.இ5/2667/2020)**
**தீர்மானம் எண்: 1987 அனுமதிக்கப்பட்டது .**

**11.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 28 முள்ளிக்கொரையில் கதவு எண் 117/200 முதல் சிக்கம்மன் கோவில் வரை உள்ள தார் சாலை ஆனது மழையினால் பழுதடைந்து உள்ளது. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் மிகவும் சேறும் சகதியுமாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் மழையினால் பழுதடைந்து தார் சாலைக்கு பதிலாக சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே மேற்கண்ட இடத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.25/– இலட்சத்தில் வருவாய் நிதிமான் கீழ் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்காக.**
**(ந.க.எண்.இ5/3689/2020)**
**தீர்மானம் எண்: 1988 அனுமதிக்கப்பட்டது .**

**12.** இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியான ஊட்டியில் இருந்து குன்னூர் செல்லும் சாலையில் SM ஹாஸ்பிட்டல் அருகில் உள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பிளாக் இடத்தில் இருந்து ஊற்று நீர் மேல் வந்து தார் சாலையில் சென்று கொண்டு இருக்கிறது. இதனால் இச்சாலையில் வாகனங்கள் சக்கரத்தில் படும் போது அருகில் தார் சாலையில் கடந்து செல்லும் பொது மக்கள் மீது தெறிக்கிறது. இதனால் சாலையில் நடந்து செல்பவர்கள் மிகவும் சிரம்மப்பட்டுகின்றனர். எனவே மேற்கண்ட

ஊற்று நீரை அருகில் உள்ள மழைநீர் கால்வாய்க்கு செல்லும் மேன்ஹோல் மற்றும் பைப்லைன் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00/– இலட்சத்திற்கு வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்காக.**

**(ந.க.எண்.இ5/3700/2020)**

**தீர்மானம் எண்: 1989 அனுமதிக்கப்பட்டது .**

**13.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையிலும் வார்டு எண். 28 முதல் 32 வரை உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்டு உள்ள பாதாளாச் சாக்கடை மேன்ஹோல் மற்றும் பைப்லைன்கள் நல்ல முறையில் செயல்பாட்டில் உள்ளன. ஆனால் மேற்கண்ட வார்டுகளில் ஒரு சில பகுதியான வால்சம் சாலை, கோத்தகிரி சாலை, ஹிக்கின்ஸ் சாலை, மார்லிமந்து சாலை, பழைய கார்டன் சாலை, குன்னூர் செல்லும் சாலை ஆகிய சாலைகளில் உள்ள மேன்ஹோல்கள் மிகவும் பள்ளமாக தார்சாலையில் இருந்து 2”அடிக்கு கீழாக உள்ளதால் இருசக்கர வாகனத்தில் வருபவர்கள் இந்த பள்ளத்தினால் தடுமாறி கீழே விழும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் தார் சாலையில் உள்ள மேன்ஹேலை சாலையின் மட்டத்திற்கு உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.98/– இலட்சத்திற்கு வடிகால் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3701/2020)**

**தீர்மானம் எண்: 1990 அனுமதிக்கப்பட்டது .**

**14.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 29 ல் உள்ள டன்மேரி நகராட்சி பம்பஹவுஸ் அருகில் உள்ள விநாயகர் கோவில் முன்புறம் உள்ள தார் சாலை மழையினாலும் நகராட்சியின் 3வது குடிநீர் திட்டத்திற்காக குழாய் பதிக்க தோண்டப்பட்ட குழியில் குழாய்கள் பதிக்கப்பட்டு உள்ளதால் மிகவும் பள்ளமாக உள்ளது. இதனால் வாகனங்கள் செல்லும் போது மிகவும் சிரம்மமாக உள்ளது. மேலும்

இப்பகுதியில் உள்ள பள்ளிகளின் பள்ளி வாகனங்கள் செல்லும் போது மிகவும் சிரம்மமாக உள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் மழையினாலும் பழுதடைந்த இடத்தையும் 3வது குடிநீர் திட்டப்பணிக்காக தோண்டி பணி முடிக்கப்பட்ட குழிகளையும் சிமெண்ட் கான்கீரிட் கொண்டு சீரமைப்பது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.25/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3703/2020)**

**தீர்மானம் எண்: 1991 அனுமதிக்கப்பட்டது .**

15. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 3 க்கு உட்பட்ட பாரஸ்ட் கேட் பகுதியில் இருந்து அணிக்கொரைக்கு செல்லும் சாலையில் பாரஸ்கேட் அருகில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் முன்புறம் உள்ள சாலை ஆனது வாளைவு மிகவும் குறுகலாக உள்ளதால் இரண்டு வாகனங்கள் வரும் போது வளைவில் ஒரே நேரத்தில் செல்ல முடியாமல் உள்ளது. மேலும் மிக நீளமான வாகனங்கள் வரும் போது இந்த வளைவில் திரும்பிச் செல்வது மிகவும் சிரம்மமாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் வளைவை அகலப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3704/2020)**

**தீர்மானம் எண்: 1992 அனுமதிக்கப்பட்டது .**

16. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 7ல் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியின் கூரை சரிந்து விழும் நிலையில் உள்ளது. மேலும் பள்ளியைச் சுற்றி உள்ள சுற்றுச் சுவர் மிகவும் உயரம் குறைவாக உள்ளதால் அருகில் குடியிருக்கும் வீடுகளில் இருந்து மாணவர்கள் வளாகத்திற்குள் நுழைந்து அங்குள்ள பொருட்களை சேதப்படுத்தி விட்டு சென்று விடுகின்றனர். மேலும் பள்ளியைச் சுற்றி வர்ணம் பூசப்பட்டு சில வருடங்களுக்கு மேல் ஆகி உள்ளது. சுவற்றில் உள்ள வர்ணம் அனைத்தும் மங்களாக உள்ளது. மற்றும் வகுப்பறையின் ஜன்னல்கள் பல ஆண்டுகள் முன்பு அமைக்கப்பட்டதால் உடைந்து உள்ளது. எனவே மேற்கண்ட நகராட்சி ஆரம்ப பள்ளியில் உள்ள குழந்தைகள் நலன் கருதி பள்ளியின் கூரை பகுதி, சுற்றுச்சுவர் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை

ரூ.20.00/– இலட்சத்திற்கு நகராட்சி கல்வி நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்பகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3434/2020)**

**தீர்மானம் எண்: 1993 அனுமதிக்கப்பட்டது .**

17. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 28 முள்ளிக்கொரையில் குடிநீர் வினியோகம் செய்ய அமைக்கப்பட்டுள்ள 2” குழாய் ஆனது மிகவும் பழமையானதால் கர்நாடகா பூங்கா முதல் சிக்கம்மன் கோவில் வரையிலான இடங்களில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் ஆனது வீணாகிறது. இதனால் அப்பகுதி மக்களுக்கு சீராக குடிநீர் கிடைக்காமலும் தார் சாலையில் செல்வதால் தார்சாலையும் பழுதடைகிறது. எனவே மேற்கண்ட இடங்களில் பழுதடையும் 2” GI குழாய்யை மாற்றி அமைத்து தண்ணீர் வீணாகாமல் தடுப்பதுடன் அப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தாயரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.65/– இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்பகிறது.

**குறிப்பு :–**

**மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.இ5/3705/2020)**

**தீர்மானம் எண்: 1994 அனுமதிக்கப்பட்டது .**

18. இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் 27/02/2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி Sullage Sucker வாகனம் TN 43 C 1837 ற்க்கு தகுதி சான்று பெறவும் மற்றும் பழுது பார்க்கும் பணி | 1.60 |

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | Nilgiris Auto Garage Centre, Mettupalayam Rs.1,57,200/- | Nilgiris Auto Garage Centre, Mettupalayam Rs.1,57,200/- |
| 2. | Mettupalayam Auto Service Centre Rs.1,63,200/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம் (ந.க.எண் இ5/8958/2019)**

   **தீர்மானம் எண்: 1995 அனுமதிக்கப்பட்டது .**

**19.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் **27/02/2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வராப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும்படி முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி வாகனம் TN 43 B 2018 பழுது பார்க்கும் பணி | 0.70 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர். Lakshmi Auto Diesel works Mettur, Rs.69,965/- | திருவாளர். Lakshmi |

| 2. | திருவாளர். Sri Jothi Murugan Motor Works Salem, Rs.73,000/- | Auto Diesel works, Mettur Rs.69,965/- |
|---|---|---|

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம் (ந.க.எண் இ5/12061/2019)**
   **தீர்மானம் எண்: 1996 அனுமதிக்கப்பட்டது .**

**20.** இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் தங்களது சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கட்டை கட்டணம், கடை வாடகை, குடியிருப்பு வாடகை ஆகியவற்றின் நிலுவைத் தொகை செலுத்துவது குறித்து ஆட்டோ வாகனத்தில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத்திற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். 1861 நாள் 31.01.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | தொகை (நாள் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.வி.சதீஷ்,<br>187/1 ரோஸ்மவுண்ட், உதகை | ரூ.1950/– |
| 2 | திரு.எம்.நாசர் அலி<br>9 லட்சுமி தெரு, காந்தல், உதகை | ரூ.2010/– |
| 3 | செயின்ட் ஜீட்ஸ் எலட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>80/90 பாம்பேகேஸ்ஹில், டேவிஸ் டெயில் சாலை, உதகை | ரூ.2220/– |

பணியின் அவசரம் அவசியம் கருதி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கயுள்ள திரு.ஆர்.வி.சதீஷ்,187/1 ரோஸ்மவுண்ட், உதகை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை ஏற்பது குறித்து தனி அலுவலரின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:-அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.11766/2018/அ1)**
**தீர்மானம் எண்: 1997 அனுமதிக்கப்பட்டது .**

**21.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு தொடர்பாக பொது மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக அதிகம் கூடும் இடங்களான தினசரி சந்தை, உழவர் சந்தை, மருந்தங்கள், மாவட்ட நிதிமன்ற வளாகம், அரசு மருத்துவமனை, S.P.Office, அம்மா உணவகங்கள் ஆகிய இடங்களில் பொது மக்கள்அடிக்கடி கை கழுவும் படி அறிவுறுத்தப்பட்டதன் பேரில், பொது மக்கள் நலன் கருதி Sintex Tank மற்றும் Wash Basin அமைக்கும் பொருட்டு கீழ்கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 1. மார்கெட் – 3 எண்கள் 2. மாரியம்மன் கோவில் சந்திப்பு – 1 எண் 3. M.S. Lane – 1 எண் 4. மணிகூண்டு – 1 எண் 5. கருவாட்டு கடை கேட் முன்புறம் – 1 எண் 6. கசினோ சந்திப்பு – 1 எண் 7. அம்மா உணவகம் – 2 எண்கள்

மேற்கண்ட பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3, 00,000/—க்கு தயார் செய்து மதிப்பீடு தொகைக்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்பகிறது.

**அலுவலக குறிப்பு :—**

1. **தனி அலுவலர்அனுமதி வழங்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.**
3. **தொகையினை குடிநீர் நிதியிலிருந்து செலவிடலாம்.**

**(ந.க.எண் இ5/3610/2020)**
**தீர்மானம் எண்: 1998 அனுமதிக்கப்பட்டது .**

**22.** இந்நகராட்சியின் குடிநீர் வடிகால் நிதியின் கீழ் 31.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1. | உதகமண்டல்ம நகராட்சி மார்கெட் மற்றும் பஸ் நிலையம் பகுதியில் Sintex தொட்டிகள் பொறுத்துப் பணி | 3.00 |

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவிகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>திருவாளர். Global Environment System, (–) 0.19% குறைவு</td><td rowspan="2">திருவாளர். Global Environment System, (–) 0.19% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருவாளர். நந்தகுமார் (+) 1.17% அதிகம்</td></tr>
</table>

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**

**(ந.க.எண் இ5/3610/2020)**
**தீர்மானம் எண்: 1999 அனுமதிக்கப்பட்டது .**

**23.** உதகமண்டலம் நகராட்சியில் கொரோனா – 19 தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள 17.03.2020 அன்று தனி அலுவலர் தீர்மான எண். 2006–31.03.2020 அன்று ரூ.9,00,000 (ஒன்பது இலட்சங்களுக்கு) செலவினம் மேற்கொள்ள மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு (15)ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

மத்திய மற்றும் மாநில அரசால் 144 தடையுத்தரவு மார்ச் 30 ஆம் தேதி வரை அறிவிக்கப்பட்டது. இத்தடையுத்தரவு மீண்டும் ஏப்ரல் 14 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அறிவுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட காந்தல் பகுதிகளில் வார்டு 24, 25 ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட மூன்று நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அப்பகுதி கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டு கிருமி நாசினி தெளிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்நகராட்சியினால் பொது சுகாதார நலன் கருதியும் உலகளவிய தொற்று நோய் அவசர நிலை நிலவுவதினால் கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதினால் கூடுதலான ரூ.20,00,000 (இருபது இலட்சங்கள்) செலவு செய்ய தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவின் படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின் படியும் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையினை தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு கிருமி நாசினி (லைசால், Liquid Hypo Chloride, பிளிச்சிங்

பவுடர், சுண்ணாம்பு தூள், பினாயில், ஆசிட்) தெளிப்பான்கள், கையுறை, முககவசம், காலுறை, பாதுகாப்பு உபகரணங்கள், முழு உறை (PPE), பேனர்கள், கை பிரதிகள், ஸ்டிகர்கள் அச்சிடுதல், விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளுதல், துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ முகாம் நடத்துதல், தங்கும் வசதி ஏற்படுத்தி கொடுத்தல், துப்புரவு பணியாளர்களுக்கு மூன்று வேலை சுகாதாரமான உணவு வழங்குதல் போன்ற அத்தியாவசிய செலவினங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3336/ஜே2/2020–9 படி மேற்கண்ட பொருட்களை டெண்டர் கோரி கொள்முதல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

**(ந.க.எண் எச்2/3261/2020)**
**தீர்மானம் எண்: 2000 அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**